கிறிஸ்தவ தொடர்புகள்

# "தொடர்பு"



வாழ்க சாந்த பிரபுவே!

வாழ்க நீதி சூரியனே!

CHARLES WESLEY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுகர்வோரின் வசதிக்காக....


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசிரியரிடமிருந்து | ... 1 |
| 2. | கிறிஸ்மஸ் பண்டிகையில் குடும்ப ஜீவியம் | ... 3 |
| 3. | தேவதூதன் பேசிய அந்த இரவு | ... 5 |
| 4. | இயேசுக் கிறிஸ்துவைத் தவிர இரட்சிப்பு இல்லை | ... 7 |
| 5. | வலது குறைந்தவர்கள் பேரிலும் இயேசு அன்பாயிருக்கிறார் | ...10 |
| 6. | அருளைப் பெற - கவிதை | ...11 |
| 7. | எனது மன்னிப்பை வென்றெடுத்தவர் - கிறிஸ்மஸ் கதை | ...12 |
| 8. | வேதாகமம் பயில்வோம் | ...15 |


கிறிஸ்தவ எழுத்தாளர்களே,

ஆண்டவர் உங்களுக்கு அளித்துள்ள வரங்களை மற்றவர்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ள இதோ ஒரு வாய்ப்பு.

★ "அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? -ரோமர் 10:14

இவ்வாறு வேதாகமம் கூறுகின்றது. ஆகவே, ஆன்ம ஈடேற்றத்துக்காக அவருடைய சித்தப்படி உங்களுக்கு அருளப்படும் செய்திகளை ஆசிரியருக்கு அனுப்பி வையுங்கள். கட்டுரை - கவிதை - சிறுகதைகள் வரவேற்கப் படும். உங்கள் ஆக்கங்கள் சுருக்கமானவையாகவும், தொடர்பின் நோக்கை நிறைவேற்றுவனவாகவும் அமைதல் வேண்டும். - ஆசிரியர்.


*'THODARPU'* **CHRISTIAN COMMUNICATIONS**

*DIRECTOR* — **Rev. R. THURAIRAJAH**

*EDITOR* — **Bro. DEVADASON JEYASINGH**

*LETTERPRESS* — **ROYAL PRINTERS,
190 - Colombo Street, Kandy.**

*ALL CORRESPONDENCE To:*

**The Editor - 'THODARPU'
'DASONS'
90 - A, Kandy Road - Kengalla**

**25 December, - 1991**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து....

கிறிஸ்துவுக்குள் ஒன்றிணையும் உள்ளங்களே,
என்னையும் உங்களையும் மீட்டெடுத்த
இயேசுரட்சகரின் இனிய நாமத்தில்
என் வாழ்த்துக்கள் .... வரவேற்புகள்.

என் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து
என் நோய்களை யெல்லாம் குணமாக்கி
என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு
கிருபையினாலும் இரக்கங்களினாலும் என்னை முடிசூட்டி
நன்மையினால் என் வாயைத் திருப்தியாக்கி

'நீ என் தாசன்; நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்.
நான் உன்னை வெறுத்து விடவில்லை' (ஏசா. 41 : 9)

என்பதாக வாக்குத்தத்தம் பண்ணி வரங்களை ஈந்தருளிய வல்ல தேவனின் வார்த்தைகளை இத் 'தொடர்பு' மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கிடைத்தமை எனது பெரும் பாக்கியமென்றே கருதுகின்றேன்.

''உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை'' (யோவான் 1 : 3) என்று எழுதியிருக்கிறபடி இத் தொடர்பும் அவராலேயல்லாமல் ஏற்படவில்லை. பூர்வ காலங்களில் பங்கு-பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றிய தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் தம்மை வெளிப்படுத்தச் சித்தங் கொண்டதன் பேரிலேயே இத் தொடர்பும் எமக்குள் ஏற்படுகின்றது. எனவே, அவரின் பிறப்பின் செய்தியைக் குறித்து அனைவரும் களிகூரும் இச்சந்தர்ப்பத்தில் 'தொடர்பு' தனது முதலாவது இதழ் மூலம் தனது கன்விப் பயணத்தைத் தொடர்வது எல்லாம் வல்ல இயேசுவின் சித்தமேயாகும்.

''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்'' - (யோவான் 14 : 6) என்று உரைத்த ''இயேசுக்கிறிஸ்து ஒருவரால் மட்டுமே இரட்சிப்பு உண்டு; ஆதலால், அனைத்து மக்களையும் அ[illegible] பால் வழி நடத்தும் ஒரு பாலமாக 'தொடர்பு' அமைய வேண்டும்'' என்பதே இவ் வெளியீட்டின் குறிக்கோள். அத்தோடு மாதாந்தம் வெளிவரும் ஒரு 'மாசிகை' யாக இது இருக்க வேண்டும் என்பதும் எம் அவா.

எனினும் ''பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே'' (ஏசாயா 48 : 17) என்று எல்லாம் வல்ல கர்த்தர் கூறும் போது அவருடைய சத்தத்துக்குச் செவி கொடுத்து அவருடைய சித்தத்துக்கே இதை ஒப்புவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் பிரியமானவர்களே,

'தொடர்பு' உங்கள் கரங்களில் வரும்போது அதைக் கர்த்தருடைய பாதத்தில் படைத்து அவருடைய ஆசீர்வாதத்துக்காகவும் வழி நடத்துதலுக்காகவும் ஜெபிக்கும்படியாக உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"யார் நமது காரியமாய்ப் போவான்" (ஏசாயா 6 : 8) என்று எம்மைக் கேட்கும் இயேசுவுக்கு நாம் என்ன உத்தரவைச் சொல்வோம்? 'அடியேன் இருக்கிறேன்; உம்முடைய ஊழியத்திற்கு உதவி புரிய என்னை வழிநடத்தும்' என்று சொல்ல முன்வருவோமா?

"அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே; நீதிமான் என்ன செய்வான்?" (சங்கீதம். 11 : 3) என்று சொல்லப்பட்டிருக்கிறபடி இந்த இருபதாம் நூற்றாண்டில் ஆவிக்குரிய ஜீவியத்தின் அஸ்திபாரங்கள் பற்பல வழிகளில் அசைக்கப்படுவதை நமது நாளாந்த ஜீவியத்தில் நாம் சந்திக்கலாம் - உணரலாம்.

உறுதியான கிறிஸ்தவ ஜீவியத்திற்கு உற்சாகமானதும் இடைவிடாததுமான ஜெபம் அத்தியாவசிய மாகிறது. அந்த ஜெபம் ஒரு மனப்பட்டதாக இருக்குமானால் இயேசுக்கிறிஸ்து அங்கே எம் நடுவில் இருப்பதாக வாக்களித்திருக்கின்றார். வல்லமையுள்ள தேவன் நம்முடனே கூட இருந்து நமது ஜெபத்தில் இணைந்து கொள்வாராயின் அந்த ஜெபம் அதிக வல்லமையுடையதாக இருக்கும்.

இயேசுவின் சீஷர்கள் ஏகோபித்து ஒருமனப்பட்டவர்களாய் எருசலேமில் கூடியிருந்து ஜெபித்த போது அந்த இடம் அசைக்கப்பட்டது. அக்கினி மயமான நாவுகள் அங்கே இறங்கின. கூடியிருந் தவர்களின் உள்ளத்திலே கர்த்தர் கிரியை செய்தார்: மக்கள் மனந்திரும்பினார்கள்.

"விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்" - (யாக்கோபு. 5 : 15) என்ற வேதவாக்கின் காரியங்கள் நடந்தேறியதை இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

வாசருவின் சகோதரி கூட "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால், என் சகோதரன் மரிக்க மாட்டான்" என்று அங்கலாய்த்ததுண்டு.

எனவே, இயேசுக்கிறிஸ்து எம் மத்தியில் இருக்கவேண்டுமானால் எமது ஜெபம் ஒருமனப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை நாம் மறந்து போகக் கூடாது.

"உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும் போது அவரைக் கண்டடைவாய்." - (உபாகமம் 4 : 29)

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்: நடந்தாலும் சோர்ந்து போகார்கள்." - (ஏசாயா. 40 : 31)

தூய ஆவியானவர் தாமே.

'தொடர்பு' மூலமாக உங்கள் உள்ளங்களில் கிரியை செய்வாராக.

கிறிஸ்துவின் பணியில்,

— தேவதாசன் ஜெயசிங் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்மஸ் பண்டிகையில்

## - குடும்ப ஜீவியம்

ஒரு காலத்தில் நத்தார் பண்டிகைகளில் 'குடும்பஐக்கியமே' மிக முக்கியமானதோர் இடத்தை வகித்துவந்தது. இன்றோ குடும்பமாக ஒன்றித்து நத்தார் தினத்தைக் கொண்டாடுவது மிகவும் நலிந்து விட்டது என்றே குறிப்பிட வேண்டும். 'ஒன்று கூடல்' இன்றிச் சிதறுண்டு பிரிந்த குடும்பங்களாக வெவ்வேறு இடங்களில் இருந்து நத்தார் தினத்தைக் கொண்டாடுவதை நாம் பல இடங்களில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அநேக இனபந்துக்கள் பல மைல் களுக்கப்பால் பிரிந்து வாழ்கின்றனர். பெற்றோர் பலர் பிரிந்து வாழ்வதனாலும் பிள்ளைகள் பெற்றோருக்கிடையிலும் ஒருமைப்பாடு இல்லாதிருக்கிறது. மறுபுறம், இவ்வாறு பிரிந்து பெற்றோர் பலர் மறுமணம் செய்து கொண்டுள்ளமையால் ஏற்படும் மாறுதல்கள் காரணமாக இதைப் பழைய பாரம்பரிய நிலையில் கொண்டாட முடியாத இழிநிலை ஏற்படுகின்றது. அனைத்து நாடுகளிலும் இவை இன்று சகஜமாகிவிட்டது.

வயது மூதிர்ந்தவர்கள் அநேகமாகக் காணப்படும் இக் காலகட்டத்தில் தமது சொந்த இல்லங்களிலே இருக்க முடியாமையால், தாம் விரும்பித் தெரிந்து கொள்ளாத பல விடுதிகளில் வயோதிபர் இல்லங்களில், அயலவர் வீடுகளில் தமக்குச் சொந்தமானவர்களைப் பிரிந்து வாழும் நிலையை நாம் பல நாடுகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்கள் பாரம்பரிய முறையில் நத்தாரைக் கொண்டாட முடியாமல், உற்றார் உறவினரோடு குதூகலமாகக் கொண்டாடி அனுபவிக்க முடியாமல் மிகவும் பரிதபிக்கத்தக்கக் கூடிய நிலையில் உள்ளனர்.

இன்று, பல பிரச்சினைகளைக் கொண்ட. மனநிலை உள்ளவர்களாய், துன்பம் சோதனைகளை அனுபவித்து வாழும் பல குடும்பங்களை நாம் சந்திக்கின்றோம். இக்குடும்பங்கள் இந் நத்தார் காலங்களில் சொல்லமுடியா பலவேதனைகளையும், துன்பங்களையும் அநுபவிக்கின்றன.

அன்றும், பிளவுபட்டிருந்த - குழப்பம் நிறைந்திருந்த காலகட்டத்திலேதான் இயேசுக் கிறிஸ்து பிறந்தார். வேத வாக்கியங்களின்படி யோசேப்பும் மரியாளும் திருமணத்திற்கென்று நிச்சயிக்கப்பட்டிருந்தார்கள். ஆனாலும் யோசேப்பு அவளை அறியுமுன்னரே பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்த மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்தார். அவர் பிறந்தது ஒரு மாளிகையிலோ அல்லது வீட்டிலோ அல்ல மாட்டுத் தொழுவத்தில். மகிமையெல்லாம் துறந்து கடவுளின் குமாரனாக, ஏழையின் உருவெடுத்து, எம்மோடு வாழ்வதற்கு இங்கு வந்தார். இதை ஆழ்ந்து கவனிக்கும் போது பரிசுத்தமான கடவுளின் குமாரனாக தன் உன்னத மகிமையை விட்டு எங்களுடன் இருக்கும்படியாகவே இங்கு வந்தார்.

சகல வசதிகளோடும், உறுதியான நிலவரங்களுடனும் நத்தார் காலத்தைச் செலவிட நாம் எண்ணுகின்றோம். ஆனால், அநேக மக்களுக்கு இப்படியான நிலை அமைவதில்லை. அன்று - அந்த முதல் நத்தாரின் போதும் இந் நிலை இருக்கவில்லை. ஆனாலும் அது உண்மையான சந்தோஷத்தையும் மகிமையையும் உலகுக்கு அளித்தது.

அன்பர்களே, இயலுமானவரை இந்த நத்தார் தினத்தில் உங்கள் இனபந்துக்கள் குடும்பத்தாருடன் உறவுகொள்ள முயற்சி செய்யுங்கள். இந்த விசேஷ தினம் இதற்கமைய இல்லாவிடினும் - இந்த நாள் உண்மையாக எதை வெளிப்படுத்துகின்றது? என்ன கருத்தை வெளிப்படுத்துகின்றது என்பதைச் சற்று எண்ணிப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் முதல் நத்தார் தினமான இயேசுவின் பிறப்பை வேறு வழிகளிலே திட்டமிட்டு நடத்தியிருக்கலாம். ஆனால் அவரோ நாசரேத்துக்கு வெகு தொலைவிலிருந்த மாட்டுத்தொழுவத்தைத் தெரிந்து கொண்டார்.

இயேசுவின் பிறப்பின் போது யோசேப்பும் மரியாளும் தாங்கள் அருமையாக நேசித்த சொந்த ஊருக்கு வெகு தொலைவில் இருந்தார்கள்.

நத்தார், குடும்பமாக - ஐக்கியமாக - அன்பாக - அந்நியோந்நியமாக நாம் ஒன்று கூடும் நேரம். இதற்காக நாம் யாவரும் முயலவேண்டும். செய்யக் கூடியவற்றைச் செய்ய வேண்டும். அதேவேளை, எல்லாவற்றுக்கும் மேலாக பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தையும் அங்கு பிறந்தவரையும் நினைவு கூரவேண்டியது அத்தியாவசியமாகும்.

இங்கு அவர் உங்களுடனே கூட இருக்கின்றார். அவரை நேசியுங்கள். அவர் உங்களை நேசிக்கிறார்.

இயேசுக் கிறிஸ்துவே கர்த்தர் உங்களுக்குத்தரும் நத்தார் அன்புப் பரிசு.

---

## ● வாசகர் கேள்வி

எமது அடுத்த 'தொடர்பு' வாசகர்களின் கேள்விகளுடன் தொடர்பு கொள்ள ஆயத்தமாகிறது. உங்கள் கேள்விகளை ஒரு தபால் அட்டையில் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்

---

- கிறிஸ்தவ கவிதைப் போட்டி
- வேதாகமப் புதிர் போட்டி.
- குறுக்கெழுத்துப் போட்டி

............ விபரங்கள் அடுத்த தொடர்பில்.

---

# இதயம் எங்கே?

- குறுங்கதை -

அது ஒரு குக்கிராமம். புதுமை எதையுமே அறிந்திராத அக்கிராமவாசி ஒருவன் ஒரு நாள் பட்டணம் போனான். அவ்வூரில் அப்பொழுதுதான் அறிமுகமாகியிருந்தது மேசைக்கடிகாரம். அதில் ஒன்றை வாங்கிச் சென்றான்.

சில நாட்களில் அக்கடிகாரம் இயங்காமல் நின்று விட்டது. கிராமவாசிக்கு ஆத்திரம் அதை வாங்கிய கடைக்குச் சென்றான். "கடிகாரம் ஓடலியே" என்றான்.

"கடிகாரம் எங்கே?" என்றார் கடைக்காரர். சட்டைப்பைக்குள் கையை விட்டவன் கடிகாரத்தின் முட்கள் இரண்டையும் எடுத்து மேசைமீது வைத்து "கடிகாரம் நல்லாத்தான் இருக்கு; இந்த முள்ளுதான் நிண்ணு போச்சி. இதைச் செய்து தாங்க" என்றான்.

அங்கிருந்த அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்

இதயத்தை இறைவனுக்குக் கொடாமல்
கையையும் காலையும் கொடுப்பதால் என்ன பயன்?

நன்றி: நகைமொழிக் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவதூதன் பேசிய அந்த இரவு . . .

- அருட்திரு. ஆர். துரைராஜா

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபடி மனித வரலாற்றில் கிறிஸ்துவானவர் மனுவுருக் கொண்ட அச்சம்பவத்தையே இக் கிறிஸ்மஸ் தினம் எமக்கு நினைவூட்டுகிறது. எதிர்கால நிகழ்வுகளைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கும் தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவானவரின் பிறப்பைப் பற்றிய வியக்கத்தக்க பல செய்திகளை ஏற்கனவே விபரமாகக் கூறியிருந்தார்கள்.

'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்.

தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற் கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்திற்கும் முடிவில்லை''
— ஏசாயா 9: 6, 7

என்பதாக ஏசாயா தீர்க்கதரிசி கூறியிருந்தான். மேலும் அவன் 'கிறிஸ்துவானவர் ஒரு கன்னிகையின் வயிற்றிலேதானே பிறப்பார்' என்பதையும் உறுதிப்படுத்தி

''இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்'' — ஏசாயா 7: 14

எனவும் குறிப்பிட்டிருந்தான். அது மட்டுமல்ல; மீகா என்றும் தீர்க்கதரிசி கிறிஸ்துவானவர் பிறக்கப் போகும் ஊர் 'பெத்லகேம்' என்பதாகப் பெயரிட்டே காட்டியிருந்தான்.

இவைகளெல்லாம் கடவுளின் பிள்ளைகள் கணநேரம் கேட்கக்கூடிய தீர்க்கதரிசிகளின் தொனிப் பொருளாகவே அமைந்திருந்தன.

ஆனால், வேளை வந்தபோது - உண்மை உருவகமானபோது - உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிய போது . . .

அதுவே ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முதல் கிறிஸ்மஸ் இரவாக மலர்ந்தது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இச் சம்பவம் நிகழ்ந்த அவ்வேளையிலே தானே உன்னதமான நற்செய்தியொன்று ஒரு தேவதூதனால் வழங்கப்பட்டது.

அந்நாட்களிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

தேவதூதன் அவர்களை நோக்கி ''பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். . .'' என்றான் — லூக்கா. 2: 8-11

முதலாவது கிறிஸ்மஸ் ஆராதனை ஒரு கோயிலிலோ, அன்றி பேராலயமொன்றிலோ அல்லது சபை மண்டபம் ஒன்றிலோ நடைபெறவில்லை. ஒரு திறந்த வெளியிலேதான் அது நடைபெற்றது.

கிறிஸ்துவானவர் பிறந்த செய்தி விண்ணிலே எதிரொலித்தது. தேவதூதன் அந் நற்செய்தியை தாழ்மையுள்ள ஒரு குழுவினர்க்கே முதன் முதலில் அறிவித்தான். அந்த மேய்ப்பர்கள் அறிவிலிகளும், எளியவர்களுமாய் இருந்தும் கூட சந்தடி நிறைந்த உலகத்தின் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் பரலோகின் சத்தத்தைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாய் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிகரமான இந்நற்செய்தி முதலில் சபைத் தலைவர்களுக்கோ, கல்விமான்களுக்கோ அறிவிக்கப்படவில்லை என்பது இங்கு ஆச்சரியத்துடனே குறிப்பிடத்தக்க வொன்றாகும்.

கவனிப்பதற்காக எவர்கள் தங்கள் இதயங்களை ஆயத்தப்படுத்துகிறார்களோ அவர்களிடமே கடவுள் பேசுகிறார். யூதேயாவின் மேய்ப்பர்கள் விண்ணிலிருந்தே இச்செய்தியைப் பெற்றார்கள்.

இச்செய்தி இரவு வேளையில் கொடுக்கப்பட்டமையும் இங்கு கவனிக்கத்தக்கதொன்றாகும். ஆதவன் அஸ்தமித்து விட்டதனால் ஏற்பட்ட இரவாக மட்டும் அது இருக்கவில்லை. ஆவிக்குரியதும் நீதிக்கேற்றவைகளுமான காரியங்களில் அரையிருள் கொண்டதாக உலகம் தன்னைப் போர்வையினால் மூடியிருந்த நேரம் அது. இருளடையும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இறைவன் தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

இஸ்ரவேலர் பார்வோனின் அடிமைத்தளையிலிருந்து அறுக்கப்பட்ட வேளை எகிப்திலே இரவாகவே இருந்தது.

சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் தீர்க்கதரிசியாகத் தெரிந்து கொள்ளப்பட்டு அழைக்கப்பட்ட அந்த வேளையும் ஓர் இரவாகவே இருந்தது.

தாவீதுக்கு இனிமையான சங்கீதங்களைப் பாடும் வன்மை வழங்கப்பட்டதும் இரவு வேளையாகவே இருந்தது.

பவுலும், சீலாவும் காவற் சாலையிலே கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து பாடி ஜெபித்ததும் இரவிலேயேதான்.

அதேபோல், பெத்லகேமிலே இயேசுவானவர் பிறந்ததும் ஓர் இரவில்தான். அவ்வேளையிலேதானே, தேவதூதன் ஒருவன் தோன்றுகிறான் இரட்சகர் ஒருவர் பிறந்து விட்டார் என்ற மகிமை வாய்ந்த அந் நற்செய்தியை அறிவிக்கின்றான்.

உங்களில் அநேகருக்கு இது ஓர் இராக்காலமாக இருக்கலாம். இழப்புகள், துன்பங்கள் காரணமாக ஆஸ்பத்திரி அறைகளில் உங்களுக்கு இருள் இருக்கக் கூடும். ஆனால், மேகங்களுக்கு மேலாகவே சூரியன் பிரகாசிக்கின்றது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென நான் விரும்புகின்றேன். உங்கள் உள்ளங்களிலே இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு உங்கள் வாழ்வினை அவருக்கே அர்ப்பணிப்பீர்களாயின் மகிழ்ச்சியையும், புகழ்ச்சியையும், மயிர்கூச்செறியும் மாற்றத்தையும் நீங்கள் ஒருபொழுதும் உணர்ந்திராத வகையில் அவர் உங்களுக்கு அருளிச்செய்வார்.

அந்த முதலாவது கிறிஸ்மஸ் இரவிலே, தேவதூதனால் அருளிச் செய்யப்பட்ட அச்செய்தியின் அர்த்தம்தான் என்ன? 1991 ஆம் ஆண்டு நிறைவு பெறும் இவ்வேளையில், கிறிஸ்துவானவரைப் பற்றிய உண்மை என்ன? என்பதை அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமானதொன்றாகும். இருபது நூற்றாண்டுகள் வந்து போய்விட்டன. ஆனால் இயேசுக்கிறிஸ்துவோ நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார்.

தேவதூதன், முதலாவதாக ''பயப்படாதிருங்கள்'' என்பதாகக் குறிப்பிட்டான். கிறிஸ்துவானவரின் வருகைக்கு முன்னர் உலகம் அச்சத்தால் நிறைந்திருந்தது. ரோமர் உலகத்திற்குப் பயந்திருந்தார்கள். அவர்களுடைய அச்சுறுத்தல்கள் ஆட்சியாளர்களைப் பயமுறுத்தின. மதவாதிகள் மற்றவர்களைப் பயமுறுத்தினார்கள். இருசாரார் மீதிலும் பொதுமக்கள் சந்தேகப்பட்டார்கள். எங்கு பார்த்தாலும் மக்களின் உள்ளம் சந்தேகத்தினாலும், அச்சத்தினாலும் அவநம்பிக்கையினாலுமே நிறைந்திருந்தது. ஆனால், தம் மீது நம்பிக்கை கொள்ளும் அனைவரது பயத்துக்கும் ஒரு முடிவினைக் கொண்டு வர இயேசுக்கிறிஸ்துவினால் முடியும். ''பயப்படாதே! சிறுமந்தையே'' என்பது இயேசுக்கிறிஸ்துவின் வழிகாட்டலையும், போதனையையும் குறிக்கும் ஒரு பதமாகும்.

இன்றைய உலகம் பயத்துடனேயே வாழ்கின்றது. எம்மில் அநேகர் கடவுளைத் தவிர்ந்த மற்றெல்லாக் காரியங்களிலும் பயப்படுகின்றோம். எல்லாவற்றையும் விட கடவுளுக்கே நாம் அதிகம் பயப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் இயேசுக்கிறிஸ்துவின் மூலம் நாம் கடவுளோடு இணைந்து கொள்வோமாயின் நாம் அஞ்சவேண்டிய அவசியமே இல்லை. ''மாசற்ற அன்பு மனப் பயத்தைப் போக்கும்'' பயத்திலிருந்து விடுதலை பெற ஒரே வழி இயேசுக் கிறிஸ்துவே. ''பயத்திலிருந்து விடுதலை.'' என்பது எமது சுய பலத்தால் ஆகக் கூடிய ஒன்றல்ல; அது கடவுளால் தரப்படக் கூடியதும். பயத்தைப் போக்குவதற்காக நேரடியாகவே வருகை தரும் இயேசுக்கிறிஸ்துவுடனான தைரியமுள்ள ஓர் இணைப்புமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய பயம் என்ன? எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்கிறதே என நீங்கள் அஞ்சுகிறீர்களா?

அதற்குப் பதில் இயேசுக்கிறிஸ்துவே.

சில சமயங்களில் வாழ்க்கையின் பாரங்கள் உங்களால் சுமக்கக் கூடாதளவு சுமையாக இருப்பதாக எண்ணி நீங்கள் அஞ்சுவதுண்டா?

அதற்கும் பதில் இயேசுக்கிறிஸ்துவே

மரணத்திற்கு நீங்கள் பயப்படுவதுண்டா?

அந்த மரணத்தையே வென்றவர் இயேசுக் கிறிஸ்து. நீங்கள் அவரில் நம்பிக்கை வைத்தால், அப்போஸ்தலனாகிய பவுலுடனே கூட நீங்களும் இணைந்து ''சாவே, உன் கூர் எங்கே?'' எனக் கேட்க முடியும்.

ஆம். இயேசுக் கிறிஸ்துவே எல்லாவற்றுக்கும் பதிலாக இருக்கிறார். அந்த முதலாவது கிறிஸ்மஸ் இரவிலே தேவதூதனால் தரப்பட்ட அம் மகத்தான செய்தி மனித சமூதாயத்தினுள் இன்றும் வந்து கொண்டேயிருக்கிறது. அச்செய்தி மிக மிக அருமையானது.

''பயப்படாதிருங்கள்;இரட்சகர் பிறந்திருக்கிறார்''

கடவுள் உலகை நேசிப்பதோடு மட்டும் விட்டு விடாமல், மனுவுருக் கொண்ட இயேசுக் கிறிஸ்து மூலமாய் தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக் கொள்வதற்காக மனித குலத்துள் வந்தார்.

பாவத்தின் பலத்தினைப் பார்க்கிலும் கடவுளின் வல்லமை மேலானது என்பதைத் தெளிவாகக் காட்டுவதனால் இந்நற்செய்தி உன்னதமான ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அவ் வல்லமையை நம்முடனே கூட பகிர்ந்து கொள்ள அவர் என்றும் வாஞ்சையாக இருக்கின்றார்.

---

# இயேசுக் கிறிஸ்துவைத் தவிர இரட்சிப்பு இல்லை

## ( அதற்காகவே அவர் மனுவுருக் கொண்டார் )

இவ்வுலகையும் இதிலுள்ள சிருஷ்டிகள் அனைத்தையும் படைத்த தேவன் அவையனைத்தும் நல்லதாக அமைய வேண்டும் என்றே அவாக் கொண்டிருந்தார். ஆனால், மனிதனைப் படைத்த போது அவருடைய நோக்கத்திற்கு மாறான - பிரதிகூலங்கள் நடக்கத் தொடங்கி விட்டன.

இயற்கை வனப்புடன் இலங்கிய இவ்வுலகத்தின் எழிலை ரசிக்கவும் அதன் பலனைப் புசிக்கவும் இறைவனின் சித்தப்படி வாழவுமே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். தனிமையாக இருந்த அந்த மனிதனோடு கடவுள் தொடர்பு கொண்டிருந்தார். சாயங்கால வேளைகளிலே அவனோடு உலாவி - உறவாடிக் கொண்டும் வந்தார்.

மனிதனின் தனிமையை விரும்பாத மகத்துவமுள்ள தேவன், ''மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல; ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்'' எனச் சித்தங் கொண்டார். ஆகவே, தான் உருவாக்கியிருந்த மனிதனின் விலா எலும்பைக் கொண்டே ஒரு அழகிய பெண்ணை உருவாக்கி - ஜீவ சுவாசத்தை ஊதி அவனோடு இணைத்தார். ஆணும் பெண்ணுமாக வாழ்ந்த அவர்கள் இறைவனோடு இன்பகரமாக ஜீவித்து வந்தார்கள். இதைப் பொறுக்காத சபிக்கப்பட்ட சாத்தான் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் இருக்கும் தொடர்பைக் குறைக்க வேண்டும்; அதை அடியோடு அறுக்க வேண்டும் என்று எண்ணினான். அவனது எண்ணம் நிறைவேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியெனில், ஆணாகிய ஆதாமை விட்டுப் பெண்ணாகிய ஏவாளைச் சந்திக்கிறான். பெண் இயற்கையாகவே கொஞ்சம் பலவீனப் பட்டவள்தானே. ''கடவுள் தந்த கட்டளைகள் நயவஞ்சகமானவை; தன்னைப் போலவே மனி தனும் வாழத் தொடங்கி விடுவான் என்ற கார ணத்தினால்தான் அவர் இத்தோட்டத்தின் மத் தியில் உள்ள கனிகளைப் புசிக்க வேண்டாம் என்று கூறியிருக்கிறார். எவ்வளவு அநியாயமான காரியம் இது? இப்படி நீங்கள் கடவுளுக்கு அடி மைப்பட்டு வாழவேண்டுமா' இக்கனிகளைப் புசி த்து நீங்களும் தேவர்களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கலாமே'' என்று ஆசை காட்டு கிறான்.

தானும், தன் கணவனும் ஒருபடி உயர்ந் திருக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமென்றால் எந் தப் பெண்தான் சும்மா இருப்பாள்?

அந்தக்கனியை தானும் புசித்தாள். தன் கணவனுக்கும் கொடுத்தாள். இருவருமே புசித்த போதுதான் -'கீழ்ப்படியாமை' என்னும் பாவம் அங்கே உண்டாகிறது. அதுமட்டுமல்ல; தேவசித்தம் மீறப்பட்டபடியினால், தேவசத் தத்துக்குச் செவி கொடுக்கப் பயந்து அவர்கள் இருவரும் விருக்ஷங்களின் கீழே பதுங்கிக் கொள் ளுகிறார்கள். இரண்டாவதாக, இங்கே, இது வரை இல்லாத 'பயம்' ஒன்று ஏற்படுகிறது. மூன்றாவதாக, 'தேவ சமுகத்தினின்றும் ஒதுங்கி ஒளித்துக் கொள்ள வேண்டிய நிலை' ஏற்படு கின்றது.

என்றாலும் அன்போடு ஆதரிக்கும் தேவன் அந்திவேளையிலே அங்கு வருகிறார்... வழமை யாக நிமிர்ந்து நிற்பவன் - அவரது வரவை எதிர் பார்த்திருப்பவன், என்றும் மகிழ்வோடிருப்பவன், இன்று சோர்ந்து - கூனிக்குறுகி, துக்கத்தோடு, அவர் வரவை வெறுத்தவனாக பற்றைக்குள் பதுங்கியிருக்கிறான்.

ஆனாலும், தேவனாகிய கர்த்தர் 'ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?'' என்கிறார். 'ஒளித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று பதில் வருகிறது. 'அப்படியானால், நான் புசிக்க வேண் டாம் என்று சொன்ன கனியைப் புசித்தாயோ? என்கிறார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பாவ அறிக்கை செய்ய அவன் மனம் இடம்தரவில்லை. தன் னைக் குற்றவாளி என்று ஏற்றுக் கொள்ள அவனது மனச்சாட்சி ஒவ்வவில்லை. மாறாக, மனைவி மீது குற்றம் சுமத்துகிறான்... மனை வியைக் காட்டிக் கொடுக்கிறான்.. ''நீர் எனக் குத் துணையாகத் தந்தீரே ஒருத்தி; அவள்தான் கொடுத்தாள்; அவளேதான் என்னைக் கெடுத் தாள்'' என்கிறான். ஆனால் அந்தப் பெண்ணோ, தானும் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டா ளில்லை. தன்னைக் குற்றவாளியெனக் கூறு வதை அவன் ஏற்கவுமில்லை - ''நான் அல்ல; சர்ப்பம் தான் என்னை வஞ்சித்தது'' என்கி றாள்.. ஆனால் சர்ப்பமாகிய சாத்தானோ எது வும் பேசவில்லை. 'மௌனம் சம்மதத்திற்கு அ[illegible]றி' என்பார்கள். தன் குற்றத்தை ஒப்புக் [illegible]டுதானே ஆகவேண்டும். பரலோக தேவ னுக்கு முன்பாக பாவம் ஒன்றைச் செய்ய மனி தனை மயக்கி விட்டேனே என்ற மகிழ்ச்சி அதற்கு..

இவற்றின் பெறுபேறாக மூவருக்குமே சாபம் கிடைக்கிறது. இவர்களைச் சபித்தபடி யினால் இறைவன் மகிழ்ச்சியடைந்தாரா? இல்லை. வாழ்விழந்து போன இந்த மனுக்குலத் துக்கு மீண்டும் வாழ்வளிக்க வேண்டும் என்பதே அன்பின் தேவனுடைய ஒரே எண்ணமாக இருந்தது.

இரண்டாம் தலைமுறையிலே இருவர் சகோதரர்கள். காயீன் - ஆபேல் என்பவர்கள் இருவருக்குமே ஒருவரிலோருவர் உள்ளன்பு இல்லை. காயீன் கமக்காரன். ஆபேல் பண்ணை யாளன். இருவரும் தங்கள் காணிக்கைகளை இறைவன் சந்நிதியில் படைத்த வேளை.. ஆபே லின் காணிக்கை மட்டும் அங்கீகரிக்கப்பட்டது. ஏனெனில் அவன் தாழ்மை, பொறுமை, அன் புடையவனாகக் காணப்பட்டான். காயீனோ, இவை அற்றவனாகவும் அவனைவிடவும் தான் உயர்வானவன் என்ற ஆணவம் கொண்டவனா கவும் காணப்பட்டான். இதனால் இவனது காணிக்கையை இறைவன் ஏற்றுக் கொள்ள வில்லை.

இங்கே.. ஆத்திரம் - பொறாமை - இரத் தம் சிந்துதல் எல்லாமே ஏற்படுகின்றன. ஆம். அன்றுதான் மனிதனை மனிதன் கொலை செய்த மாபெரும் பயங்கர சம்பவம் முதன்முதலில் நடக்கின்றது.

'எல்லாமே நல்லபடியாக இருக்க வேண் டும்' என்ற எதிர்பார்ப்பில் அனைத்தையும் படைத்த கடவுளுக்கு கசப்பான அனுபவங்களே கிடைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் பாவத்தின் இருப்பிடமாகவே பூமி நிறையத் தொடங்கியது. என்றாலும் அன்புள்ள தேவன் தன் பிள்ளைகளில் ஒருவராவது கெட்டுப் போகாமல் எல்லாரும் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என ஆசைப்பட்டார். ஒவ்வொருவரும் வெவ்வேறு வழிகளில் புறப்பட்டு - தாம் நினைத்ததே சரியென்ற கொள்கை உலகில் பரவிற்று. தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் ஒருவனாகிலும் உலகில் இல்லை பாவ நிவாரண பலி யென்றும் குற்ற நிவாரண பலி யென்றும் தமது பாவங்களுக்காக மிருகங்களைப் பலியிட்டு அவற்றின் இரத்தத்தைப் பலி பீடத்தில் தெளிப்பதும் ஒரு பாரம்பரியமாக வந்து கொண்டிருந்தது.

'ஒவ்வொரு மனிதனின் பாவத்துக்காகவும் அநேக மிருகங்களின் உடல்கள் தகனிக்கப்படுவதை விட எல்லா மனிதரின் பாவங்களுக்காகவும் தம்மைத் தாமே பலியாக செலுத்தி விட்டால் நல்லது' என்பதே அன்புள்ள தேவனின் சித்தமாக இருந்தது. தம்மைப் பலியாக்க வேண்டுமானால் தான் மனுவுரு எடுக்க வேண்டும்.

எனவே, இதுபற்றி ஏசாயா தீர்க்கதரிசி பல ஆண்டுகளுக்கு முன்னே தீர்க்கதரிசனம் உரைத்தான்.. ''இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு 'இயேசு' என்று பேரிடப்படும். ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்கள் பாவங்களை இரட்சிப்பார்''

தீர்க்கரின் வாக்குப் படியே தேவனாகிய பிதா... குமாரனாக... தம்மை ஒரு கன்னியின் வயிற்றில் 'அர்ப்பணித்து.. மனுமகனாகப் பிறந்து. இழந்து போயிருந்த தொடர்பை-மீண்டும் ஏற்படுத்தினார். அத்தொடர்பு மீண்டும் அறுந்து போகாமல் அதை வலுப்படுத்திக் கொள்ளும் படியாக, மக்களின் பாவத்தின் காரணமாக மரத்திலே உயிர் நீத்து - அடக்கம் பண்ணப்பட்டு - மீண்டும் மூன்றாம் நாள் வெற்றியோடு உயிர்த்தெழுந்து.....

'இருந்தவராகவே இருக்கிறேன்' என்றும் 'அல்பாவும் ஒமேகாவும் - முந்தினவரும் பிந்தினவரும் ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன்' என்றும், 'இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் சதாகாலமும் உங்களோடே இருக்கிறேன்' எனவும் வாக்களித்திருக்கிறார்.

'நானே, ஜீவ அப்பம்; வானத்திலிருந்து இறங்கி வந்த மெய்யான ஜீவ அப்பம் நானே;'' ''நானே, வழியும் - சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் - என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்''

என்றெல்லாம் வாக்களித்திருக்கும் நம் இயேசு என்றென்றும் நம்மோடிருக்கிறார். நாம் அவரைத் தேடினால் அவரைக் கண்டடைவோம்.

உலகம் அவரைப் பற்றிப் பல விமர்சனங்கள் - வியாக்கியானங்கள் கூறலாம்' ஆனால், 'அவராலேயன்றி இரட்சிப்பு இல்லை' என்பதை எவராலும் மறுக்க முடியாது. இயேசுவின் வழியில் செல்ல முற்படும் போது இக்கட்டு - இடர் - ஏற்படத்தான் செய்யும். இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசிப்பவன் இறைவனைக் கண்டடைவான்.. அகன்ற வாசல் எப்பொழுதும் கேட்டுக்குப் போகிற வழியாகவே அமையும்.

எனவே, இரட்சகர் இயேசுவுடன் தொடர்பு கொண்டு இரட்சிப்பைப் பெற முயல்வோமாக.

★ நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர் நாமம், அதிசயமானவர் - ஆலோசனைக் கர்த்தர் - வல்லமையுள்ள தேவன் - நித்திய பிதா - சமாதான பிரபு என்னப்படும். —ஏசாயா 9:7

★ தேவன் - தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.
—யோவான். 3:16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலது குறைந்தவர்கள் பேரிலும் இயேசு அன்பாயிருக்கிறார்



நான் ஐந்து வயதாக இருந்த பொழுது நடந்த சம்பவங்களை நினைவுபடுத்த முடியாவிட்டாலும் அந்த வயதில் முதன் முதலாக பாடசாலைக்குப் போன நாளை என்னால் மறக்கவே முடியாது. நான் பாடசாலைக்குப் போவதை விரும்பவில்லை. ஆனால் கட்டாயமாகச் செல்ல வேண்டியிருந்தது. அன்று வீடு திரும்பியதும் என் தாயாரிடம் "நான் இனிமேல் திரும்பவும் பாடசாலைக்குப் போவேன்; ஏனெனில் அங்கு எனக்கு ஒரு நண்பனுண்டு. அவன் பெயர் மைக்கல், அவன் என்னிலும் பெரியவன்." என்று கூறினேன். அப்படியே ஒவ்வொருநாளும் பாடசாலையிலிருந்து திரும்பியதும் அவனைப் பற்றி என் வீட்டாரிடம் எடுத்துச் சொல்வேன்.

ஒருநாள் என் தாயாருடன் வெளியே சென்றபோது மைக்கலை என் தாயாருக்கு சுட்டிக் காட்டினேன். அவனைச் சந்தித்தபோது என் தாயார் ஆச்சரியப்பட்டார். அவன் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவனுக்குப் பேச முடியாது. அவன் ஒரு வலது குறைந்த பையன். பாடசாலையில் பலகையில் ஒட்டியிருக்கும் படங்கள், எழுத்துக்கள் மூலமே அவன் மற்றவர்களுக்குத் தான் கூற எண்ணியதை வெளிப்படுத்த முடியும். எனது சகோதரனின் பெயர் 'மைக்' என்றபடியால் அவன் பாடங்களைச் சுட்டிக் காட்டி 'மைக்' என்றதை வெளிப்படுத்தியபோது இலகுவில் அவன் பெயரைப் புரிந்து கொண்டேன்.

'மைக்கல் வலது குறைந்தவன் என்ற எண்ண'மே எனக்கு ஏற்படவில்லை நான் பாடசாலைக்குப்போக ஆரம்பிக்கு முன்னரே எனது குடும்பத்தார் வலது குறைந்தவர்களுக்கென ஸ்தாபிக்கப்பட்ட ஒரு இல்லத்தில் ஆராதனைகளை ஒழுங்காக நடாத்தி வந்தார்கள். எனது தாயார் ஒரு சமூக சேவையாளர். வலது குறைந்தவர்கள் எவ்வகையிலும் எங்களிலும் பார்க்க எவ்விதமும் மாறுபட்டவர்களல்ல என்பதை நாம் அறிந்து, வளர்ந்து வருவதை அவர்கள் நமக்கு வலியுறுத்தி வந்தனர்.

ஒருநாள் இவ்வித ஆராதனையில் நாம் கலந்து கொண்ட பொழுது என்ன பாட்டைப் பாட விரும்புகிறீர்களென்று கேட்டபொழுது தலை வீங்கியிருந்த நோயுடைய ஒரு பெண் "இயேசு என்னை நேசிக்கிறார்" என்ற பாட்டைப் பாடும்படி கூறினாள். அந்தப் பாட்டை நாம் பாடத் தொடங்கியவுடன் எல்லாச் சிறுவர்களும், மிக ஆர்வமாகக் கைதட்டி, தலையசைத்து தங்களால் செய்யக் கூடிய சைகைகள் காட்டி மகிழ்ந்தனர். அந்தப் பாட்டு அநேக பிள்ளைகளுக்குத் தெரிந்தமையால் சந்தோஷமாகப் பங்கு பற்றினர்.

இப்போது எனக்கு வயது பதினைந்து. நான் ஒரு தொண்டனாக அதே வலது குறைந்த பிள்ளைகள் இல்லத்தில் வேலை செய்கிறேன். 'கெலி' என்னும் ஒரு வலது குறைந்த பெண்ணுக்கு வாராவாரம் என்னால் செய்யக் கூடிய உதவியைச் செய்து வருகிறேன். நடக்க முடியாத சிலரை வெளியே கூட்டிச் சென்று விளையாட்டிடங்களில் சேர்ந்து விளையாடப் பண்ணும் பொறுப்பையும் ஏற்றிருக்கிறேன். இவர்களைச் சந்தோஷப்படுத்துவதன் மூலம் கடவுளைச் சேவிக்கிறேன் என்று உணருகிறேன்.

எனது நண்பர்கள் இவர்களோடு ஏன் நான் வீணாக நேரத்தைச் செலவிடுகிறேன்; இதனால் என்ன பயன் என்று கேள்விகேட்பதுண்டு. இவர்களுடன் பழகுவதால் என்னையும் இவர்கள் நோய் பாதிக்கக் கூடும் என்று சொல்பவரும் உண்டு. மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்களென்று நான் கவலைகொள்வதே கிடையாது. பலவீனமுடைய இந்த மக்களும் சாதாரண மக்கள் போல் ஓரளவிலேனும் சந்தோஷமான வாழ்க்கை வாழ நாம் முயற்சி செய்து எங்களாலான உதவி வழங்க வேண்டுமென்பதே எனது மனப்பான்மை. இச் சேவையை கடவுளுடைய சேவையென எண்ணி அன்புடனும் பண்புடனும் இந்த மக்களுக்கு உதவி புரிவதே உகந்த காரியம். அவர்களைக் குளிப்பாட்டி உணவூட்டிப் பராமரிப்பது எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் அவர்கள் பதில் கூற அல்லது நன்றி சொல்ல இயலாத நிலையிலிருந்தாலும் நாம் இச்சேவையை இயேசுவுக்கென்று செய்வோம். மகிழ்ச்சியுடன் பணிபுரிவோம். "நான் பசியாயிருந்தேன்; எனக்குப் போஜனம் கொடுத்தாய். தாகமாயிருந்தேன். என் தாகத்தைத் தீர்த்தாய். வியாதியாயிருந்தேன்; என்னைப் பார்க்க வந்தாய். அந்நியனாயிருந்தேன்; என்னைச் சேர்த்துக்கொண்டாய். இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தாயோ அதை எனக்கே செய்தாய்" என்று ஆண்டவர் கூறுகிறார். ஆகையால் நான் இந்த உதவிகளை இப்பேர்ப்பட்ட மனிதருக்குச் செய்யும்பொழுது அது 'கடவுளுக்கு நான் கொடுக்கும் பரிசு' என எண்ணுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளைப் பெற.....

(கவிதை) — தமிழ்ச்செல்வன் மாசிலாமணி

1. ஏசுவின் வார்த்தையை ஏற்று நடப்பவன்
   ஏற்றமே கண்டிடு வான் - மன
   மாற்றமும் பெற்றிடு வான் - அந்த
   மாசுமறு விலான் நேயவழிச் சென்றால்
   மாண்புடன் வாழ்ந்திடு வான் - அவன்
   ஆண்டவன் சாயலா வான்

2. மன்னித்து வாழ்பவன் மன்னிக்கப் பட்டிறை
   மன்றிலே வாழ்ந்திடு வான் - என்றும்
   நன்றே நலம்பெறு வான் - தன்
   எண்ணத்தில் தூய்மையாய் வாழ்பவன் நாளெலாம்
   ஏசுவிடம் இணை வான் - அவர்
   பாசத்தினிலே வளர் வான்

3. பாவத்தை விட்டுநல் வாழ்வைத் தொடர்ந்திட
   பரமனும் உனைஅணைப் பார் - ஞானப்
   பார்வையாய் அவர்இருப் பார் - நம்
   பாவங்கள் யாவையும் தேவனிடம் சொல
   பரிந்துமன் னித்திடு வார் - அன்பைப்
   புரிந்துனைக் காத்திடு வார்.

4. தாலந்தைப் பெற்றவன் தாரணி மேவிட
   தாகத்து டன்உழைத் தால் - சூழும்
   சோகம தைத்தணித் தால் - மேலும்
   தாலந்தைத் தந்துனை மேன்மைப் படுத்துவார்
   தாழ்ந்த நிலைமறைப் பார் - உனைச்
   சூழ்ந்த துயர்அழிப் பார்.

5. ஏசுவே எனக்கொளி என்றுபின் செல்பவர்
   இருள்வழி போகமாட் டார் - பாவ
   மருள்வழி காணமாட்டார் - தினம்
   காசுப்பொருள் பண்டம் மேலென எண்ணுவோர்
   கருணையைப் பெறமாட் டார் - தேவ
   அருளையும் பெறமாட் டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது ஒரு கிறிஸ்மஸ் கதை.

# எனது மன்னிப்பை வென்றெடுத்தவர்

ஆங்கிலத்தில்: — ஜே. ஸி. மொறிசன்

அது ஒரு கிறிஸ்மஸ் வாரம். பதினான்கு வயதுடைய சிறுவனாகிய நான் கைது செய்யப்பட்டு நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படுகிறேன். சட்டப்படி கைது செய்யப்பட்டபடியினால் எனக்கு மன்னிப்பு கிடைக்கவே இடமில்லை. எந்தவொரு உதவியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கில்லை. நான் குற்றவாளி என்பதை நன்கு அறிவேன்.

இப்பொழுது நான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறேன். எனக்குத் தாகமாகவும் இருக்கிறது. வாயிற் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்கிறது. அதில் சாய்ந்தபடி நிற்கும் அந்தப் பொலிஸ் காரரின் பார்வை என்மீது விழுகிறது. நான் நிச்சயமாகவே தண்டிக்கப்படுவேன் என்ற திருப்தி அந்தப் பார்வையிலே பிரதிபலிக்கின்றது.

அறவே நான் உதவியற்றவன் என்பதை உணர்கின்றேன். அழுது அழுது எனது கண்ணீர் முழுவதுமே வெளியேறிவிட்டிருந்தபடியால் இப்பொழுது. என்னால் அழக்கூட முடியவில்லை எனது பிழையையும், இழப்பையும் எண்ணி உற்சாகமற்றவனாக சோர்ந்து போய் நிலம் நோக்கி நிற்கின்றேன்.

அதோ... நீதிபதி தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார். அவரைப் பார்க்கக் கூடிய தைரியம் எனக்கு வரவில்லை. அவர் கருணைகாட்டுவார் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை. எப்படியுமே வரப்போகும் தீர்ப்பு எனது அழிவாகவே அமையும் என்பதை நான் உணர்ந்து கொண்டு விட்டேன்,

● எனக்கும் ஒரு பிரதிநிதியா?

மக்களால் நிரம்பி வழியும் அந்த நீதிமன்றிலே... குற்றவாளிக் கூண்டில் நான் குனிந்தபடி நின்றிருக்கும் வேளையிலே, என்னைக் குற்றப்படுத்தும் தோரணையில் உற்றுப்பார்த்திருக்கும் மக்கள் கூட்டம் "கனம் நீதிபதியவர்களே, சட்டத்தின் வல்லமையை இவனுக்கு எதிராக முழுமையாகப் பயன்படுத்துங்கள்; இனிமேலும் இவனால் பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் சமூகத்தைப் பாதுகாருங்கள்" எனக் கோஷமிடுகிறது.

நீதிமன்ற எழுதுநர் எழும்புகிறார். அங்கே அமைதி நிலவுகின்றது. நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படப் போவதாக அறிவிக்கின்றார். முதலாவதாக எனது வழக்கே வாசிக்கப்படுகிறது.

நீதிபதி எழுதுநரை வினவுகின்றார்.

"இந்தச் சிறுவனைப் பிரதிநிதித்துவப்படுத்த எவரேனும் இருக்கிறார்களா?"

'பிரதிநிதித்துவம்....' இப் பதத்தை இப்பொழுதுதான் நான் கேட்கிறேன். இது எனக்கு ஒரு புதிராகத் தோன்றுகிறது. "எனது மரண தண்டனையை நிறைவேற்ற இருப்பவனே என்னைப் பிரதிநிதித்துவப் படுத்துபவனாக்கும்" இப்படித்தான் நான் எண்ணிக் கொள்கிறேன்.

"இவனுக்காக யாருமே இல்லை." இது எழுதுநரின் பதில். இந்தப் பதிலைக் கேட்ட நீதிபதியின் விழிகள் வக்கில்கள் அமர்ந்திருக்கும் பகுதியை நோக்குகின்றன. குறிப்பிட்ட ஒருவரை அவர் பார்க்கின்றார்.

"இந்தச் சிறுவனைப் பிரதிநிதித்துவப்படுத்த உம்மை நான் நியமிக்கின்றேன்."

என நீதிபதி கூறியபோது, வக்கீல் ஒருவர் எழுந்து அங்கிருந்த ஆசனங்களுக்கூடாக நடந்து. அனைவரையும் கடந்து, குற்றவாளிக் கூண்டருகே வாசலில் நிற்கும் பொலிஸ்காரரையும் ஒதுக்கிவிட்டு கைதிக் கூண்டின் கதவைத் திறந்து என்னருகில் வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தினால் பதுங்கிய நான் பிதுங்கும் விழிகளோடு எனது வக்கீலை நோக்குகிறேன்.

அவரது முகத்தைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கின்றது. அது வலுவுள்ளதாக - சாந்தமானதாக - அன்பு கொண்டதாக – அழகு மிக்கதாகக் காணப்படுகின்றது. அவர ..ரு கண்ணின் ஒரத்திலே ..ரு கண்ணீர்த்துளி வெளி வருவதை நான் காண்கிறேன்.

அந்த கண்ணீர்த் துளி ஆச்சரியப்படத்தக்க வகையில் எனக்கு உதவியாக அமைகின்றது.

அவர் என்னருகே அமர்கின்றார். அவரது கரங்கள் என்னைச் சுற்றி அணைக்கின்றது' இறுக்கமான அந்த அணைப்பினால் என் எலும்புகளெல்லாம் அவற்றின் இணைப்புகளில் இருந்து கழன்று விடும் போல் தோன்றுகிறது. வெகு சிரமத்தோடுதான் சுவாசிக்கவும் வேண்டியதாயிருக்கிறது.

எனது வக்கீல் என்னைத் தன்னிடமாக இழுக்கின்றார். அந்த இழுப்பு மென்மையோடு கூடிய வன்மையுள்ள தன்மை கொண்டதாக உணர்கின்றேன். கழன்று போவதாகத் தெரிந்த எலும்புகள் இப்போ புதிய உணர்வையும். நரம்புகள் அமைதியையும் பெறுகின்றன. இப்பொழுது சுகமாக சுவாசிக்கின்றேன். வக்கீலின் பட்டுப் போன்ற தாடி என் முகத்தை வருடுகின்றது. அவரது அதரங்கள் என் செவியுடன் சேர்கின்றன. ''எனது சிறிய நண்பனே, நீ குற்றவாளியா'' இப்படிக் கேட்கிறார் எனது வக்கீல்.

'இல்லை, என நான் பொய்யினைக் கூறினாலும் அதனால் பயன் ஏற்படப் போவதில்லை. ஆகவே நடுங்கும் குரலில் நான் பதில் கூறுகிறேன்.

''ஆம் - ஐயா, இவர்கள் அறிந்திருப்பதற்கு மேலாக நான் மாபெரும் குற்றவாளி.''

''நீதி மன்றின் கருணை உன்னை விடுதலை செய்யுமானால் அதுவே சிறந்ததாக இருக்கும்' என நீ நினைக்கிறாயா?'' என்பதாக எனது வக்கீல் என்னிடம் கேட்கிறார். 'கருணையினால் விடுதலை' என்ற பதம் எனக்குப் புரியாத புதிராக இருக்கின்றது. ஆனால், 'நான் விடுதலை செய்யப்பட்டால் எனக்குரிய இடத்தை நான் பெற்று விடுவேன்' என்பதை மட்டும் என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆகவே, உடனடியாகவே அவருடைய வினாவிற்கான விடையை உறுதிப்படுத்துகிறேன். எனது வக்கீல் எனது தலையை மெதுவாகத் தட்டியபடி எழுந்து நீதிபதியை நோக்கி நிமிர்கின்றார்

● கருணை காட்டப்படுகிறது.

எனது வக்கீல் பேசத் தொடங்குகிறார்...

''கனம் நீதிபதியவர்களே, தங்களுடைய நீதி மன்றில் பல்லாண்டு பணிபுரியும் அனுபவத்தை நான் கொண்டுள்ளேன். தங்களுடைய தீர்ப்புகள் உறுதியானதாக அமைவதையும், அதனால் முழுச் ச..கமும் பாதுகாக்கப் படுவதையும் நான் மகிழ்ச்சியோடு அவதானித்து வந்திருக்கின்றேன். அது தங்களுக்கே உரித்தான கருணை காட்டும் பண்பினாலாகும்.

இந்தச் சிறுவனின் சார்பில் பேசுவதற்கு என்னை நியமித்தமைக்காக இந் நீதிமன்றுக்கு நான் நன்றி கூறுகின்றேன். இவன் தனது பிழையை ஏற்றுக் கொள்கிறான். இவனுடைய இதயம் நொறுங்குண்டிருக்கிறது - பச்சாதாபத்தினால் இவன் நிறைந்திருக்கிறான். தனது குழந்தைப் பராயமுதல் ஓர் அநாதையாகவும், பணமில்லாதவனாகவும், பிறரைச் சார்ந்து வாழ்பவனாகவும், இரக்கத்துக்கு ஏங்குபவனாகவுமே வாழ்ந்து வந்திருக்கிறான்...''

இவ்வாறாக அவர் குறிப்பிட்ட வேளை எனது அழுக்கு நிறைந்த கை விரல்கள் அவருடைய கோட் தொங்கலைப் பற்றிக் கொள்கின்றன. அவரை நான் பற்றிப் பிடித்துக் கொண்டால் என்னை வெளியே இழுத்துக் கொண்டு விடுவார் என்ற உணர்வோடு அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன்.

அவருடைய பேச்சு முடிந்து விட்டதென நான் நினைக்கின்றேன். ஆனால் அங்கு நிலவிய அமைதியைக் கிழித்துக் கொண்டு அவரது கனிவான குரல் மீண்டும் ஒலித்த போதுதான் நடந்து முடிந்தது வெறும் மூகவுரை மட்டுமே என உணர்கின்றேன்.

எனது வக்கீல் தனது மகத்துவமான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க ஆரம்பிக்கின்றார்.

அநாதைக் குழந்தைகள் - அவர்களது பாதுகாப்பற்ற தன்மை – அவர்களது தனிமை - அவர்களை அடிமையாக்கும் சோதனைகள் - மேய்ப்பனற்ற மந்தை போல பாழாகும் அவர்களது ஜீவியம் - அவர்களை அழிப்பதற்காக பசியோடு சுற்றித் திரியும் ஓநாய்கள் ஆகியன பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடின மனம் படைத்த மக்கள் இளகு மட்டும்-வயது சென்றவர்கள் உரத்துப் புலம்புமட்டும் அவர் பேசிக் கொண்டேயிருக்கிறார்.

என்னை நோக்கிக் கொண்டிருந்த பொலிஸ்காரரின் கண்ணீர் அவருடைய கன்னங்களில் வடியும் வரை அவர் பேசிக் கொண்டேயிருக்கிறார்.

நானோ, எனது வக்கீலின் கோட்டைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வதிலும், ஆச்சரியமிக்க அவரது முகத்தை உற்றுப் பார்ப்பதிலும், அவரது வார்த்தைகளைக் கவனிப்பதிலுமே ஆர்வமாக இருக்கிறேன். இப்பொழுது நான் நல்லபடியாக சுவாசிக்க ஆரம்பிக்கிறேன். புதியதொரு வாழ்க்கையும், நல்லதொரு நம்பிக்கையும் எனக்குள் ஊர்ந்து செல்வதை நான் உணர்கின்றேன். மிகுந்த தைரியத்தோடு எனது வக்கீலின் பால் நான் அன்பு செலுத்துகின்றேன்.

எனது வக்கீல் இன்னும் பேசுகிறார். ''கனம் நீதிபதியவர்களே, தாங்கள் கருணை கூர்ந்து இவ்வழக்கைத் தள்ளுபடி செய்து - இச் சிறுவனை விடுதலை செய்வீர்களாயின் இவனுக்குக் குடியிருப்பும், பாதுகாப்பும் அளித்து நானே இவனது பாதுகாவலனாகவும் இருப்பேன். அத்தோடு, இவனை ஒரு கல்விமானாக்கி நாட்டுக்கு ஏற்ற ஒரு நல்ல பிரஜையாக உருவாக்குவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.''

மகிழ்ச்சியின் காரணமாக எனக்குச் சத்தமிட்டு அழவேண்டும் போலிருக்கிறது. நன்றியுணர்வினால் என் இதயமே வெடிக்கும் போல் தோன்றுகிறது. நான் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் மேல் என் அசுத்தமான பாதணிகளை வைத்து அழுக்கடைந்த எனது மேற்சட்டையோடு எனது வக்கீலை ஆரத்தழுவி ஒரு தடவை அவரது கன்னங்களில் முத்தமிட எண்ணுகிறேன். அவ்வாறு நான் செய்தால் அவர்கள் என்னைத் தூக்கிலிட நான் ஓலமிட்டுக் கொண்டே உயிரிழக்க நேரிடும் என்பதையும் உணருகிறேன்.

### ★ என் தகப்பனே......!

எனது வக்கீலின் அந்த நெடிய உரையின் நடுவிலே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இது வரை 'கனம் நீதிபதியவர்களே,'' என விளித்த அவர் 'என் தகப்பனே' என அழைக்கின்றார். இது, என் உள்ளத்தை 'தொட்டது' என்று கூறுவதை விட 'சுட்டது' எனச் சொல்வதே மிகப் பெருத்தமானதாகும். எனக்காக வழக்காட தனது சொந்தக் குமாரனையே அந்த நீதிபதி நியமித்திருக்கிறார் என்றால், தனது முழுக் கவனத்தையும் என்மீது செலுத்தி எனக்குக் கருணை காட்டுவதற்காகத்தான் இருக்க வேண்டும்.

நீதிமன்றில் நிற்கும் அனைவருமே அழ ஆரம்பிக்கின்றார்கள். எனது இரு கரங்களும் வக்கீலின் கோட்டை இறுகப் பிடித்துக் கொள்கின்றன. என் எதிரில் நிற்கும் பொலிஸ்காரர் தனது தொப்பியை ஒருபுறம் சாய்த்து அருவி போல் அவரது முகத்தில் பாயும் கண்ணீரைத் தனது கைக் குட்டையினால் துடைத்துக் கொள்கிறார்.

எனது வழக்கிலே இது மிக முக்கியமானவொரு சந்தர்ப்பமாகும். எனது வக்கீல் தனது வாதத்தின் உச்ச நிலைக்கு வருகிறார். ''என் தகப்பனே, இவ்வளவு நேரமாக நான் யாருக்காக வக்காலத்து வாங்கினேனோ.. அவன் வேறு யாருமல்ல; அவன் எனது சகோதரன்.''

அமர்ந்திருக்கும் நீதிபதி எனது வக்கீலுக்குத் தகப்பன் என்றால் - அந்த வக்கீல் எனது சகோதரன் என்றால், - அந்த நீதிபதி எனக்கும் தகப்பன் தானே......

அதற்கு மேல் என்னை அடக்க என்னால் முடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் பெருக - குற்றவாளிக் கூண்டுக்கு வெளியே குதித்து - நீதிபதியின் இருப்பிடத்தை அடைந்து - அவரது மார்பினில் வீழ்கின்றேன்.

அவர் என்னை ஆரத்தழுவிய போது நான் ஒரு புது சிருஷ்டியாகவே மாறிக் கொண்டிருப்பதை என்னால் உணரமுடிகின்றது.

அவர் எழும்புகிறார். தனது கரங்களை எனது தோள்கள் மீது போடுகிறார்.

''என்னோடு கூடக் களி கூருங்கள்; எனது மகன் மரித்தான்; மறுபடியும் உயிர்த்தான். காணாமற் போனான்; திரும்பவும் காணப்பட்டான்'' என்று கூறுகிறார்.

கண்ணீர் மல்க அங்கிருந்த ஜனக் கூட்டம் ஆரவாரித்து மகிழ்கிறது. ஒருவரையொருவர் உற்சாகத்துடன் தழுவிக் கொள்ளுகிறார்கள். என்னோடு கைகுலுக்கப் புறப்படுகிறார்கள். எனது வக்கீலைப் பாராட்டுகிறார்கள். நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிரித்து மகிழ்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையிலிருந்து கட்டாயமாக நான் அவசியமாக உங்களுக்குச் சொல்ல வேண்டிய சிலவுண்டு. அந்த நீதிமன்று ஒரு குறிப்பிட்ட திருச்சபையாகும். அவ் வழக்கு ஒரு பழங்கால மறுமலர்வு ஆகும். என்னைக் கைதியாக்கி, குற்றப்படுத்தி, நியாயத் தீர்ப்புக்காக கூண்டில் நிறுத்தியது கடவுளுடைய வார்த்தையாகும். நீதிபதி சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கடவுளே தான். வழக்கில் எனக்காக மன்றாடி, எனது மன்னிப்பை வென்றெடுத்து என் இரட்சிப்பை உறுதிப்படுத்திய வக்கீல் இயேசுக்கிறிஸ்துவாகும்.

நான் பாவத்தினால் கட்டப்பட்டு. குற்றம் சுமத்தப்பட்டு. தலை நிமிர முடியாமல் நின்றிருந்த வேளை இயேசுக் கிறிஸ்து என்னைப் பொறுப்பேற்று, எனது கட்டுகளைத் தகர்த்து. எனது பாவங்களைக் கழுவி நிறைவானதும், இலவசமானதுமான மன்னிப்பீந்து ஆசீர்வாத மானதும். மகிமையானதுமான அம்மன்னிப்பை வெளிப்படுத்திய கடவுளை, உலகமனைத்தையும் நியாயந்தீர்க்கும் நீதிபதியை, இருந்தவரும் இருக்கிறவருமான என் பரலோகத் தந்தையை, அச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட அனுபவத்தோடும், பேரன்போடும் திரும்பிப் பார்க்கின்றேன்.

நன்றி: கிறிஸ்தவ தொடர்புகள் — 1982



# வேதாகமம் பயில்வோம்

★ தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெளியீட்டின் வாயிலாகவும், கடவுளின் வார்த்தைகள் வழங்கும் வல்லமையான செய்திகளை அதிகமாய் அறிந்து கொள்ளவும், வேதாகமக் கதாபாத்திரம் ஒருவரைப்பற்றி விரிவாக விளங்கிக் கொள்ளவும் இப்பகுதி அரிய சந்தர்ப்பத்தினை அளிக்கின்றது.

பாடம் 1

## மரியாள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவள்

1 ஆம் 2 ஆம் வாரம்.

மரியாள் — ஆண்டவரின் அடியாள்;

மனன வாக்கியம் — (புனித லூக்கா. 1:38)
''இதோ, நான் ஆண்டவரின் அடிமை; உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது.''

★ இதன் பொருள் என்ன?

அனைவருக்கும் பரிச்சயமான இவ்வார்த்தைகள் காபிரியேல் எனப்படும் தேவதூதனின் செய்தியால் முற்றிலும் குழப்பமடைந்திருந்த மரியாளின் மறுமொழியாகும்.

''நான் கன்னிகையாக இருக்கிறேனே; இது எப்படி ஆகும்?'' என்ற வினாவினால் மரியாள் தனது தடுமாற்றத்தை வெளிப்படுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடவுளின் தூய ஆவியின் அருளினால் குழந்தையின் பிறப்பு சாத்தியமாகும். கடவுளால் ஆகாத காரியம் எதுவுமேயில்லை. ஆகவே கன்னி கைகூட குழந்தையொன்றினைப் பெறலாம்" என்பதாக காபிரியேல் பதிலளித்தான்.

கடவுளின் வல்லமையை உறுதிப்படுத்தும் வகையில் மரியாளின் பதில் அமைந்தது.

"நான் ஆண்டவரின் அடிமை; உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது"

கடவுளுடைய திட்டப்படியும், சித்தப் படியும், வழிநடத்தப்பட்ட ஆண் - பெண் சிலரைப் பற்றி மரியாளின் சிந்தனை சுழன்றது.

- ★ ஆபிரகாமும் - சாராளும் அதிக வயது சென்றவர்களாயிருந்த நாட்களிலே தான் (நியதிக்கு மாறாக) அங்கே ஈசாக்கு பிறந்தான்.
- ★ எல்க்கானாவுக்கும் - அன்னாளுக்கும் கிடைத்த சாமுவேலின் பிறப்பும் ஒரு புற நடையாகவே நிகழ்ந்தது.
- ★ சகரியாவும், - எலிசபெத்தும் தங்கள் முதிர் வயதில்தான் யோவான்ஸ் நானகனைப் பெற்றெடுத்தார்கள்.

வழமைக்கு மாறான பிறப்புக்கள் ஏற்பட்ட இச்சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் கடவுள் தமது இரட்சிப்பின் திட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார் என்ற தொனிப் பொருள் ஒலிக்கின்றது. இவை நமது வாழ்வின் நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கூடாக நமது இரட்சிப்புக்காகவும், நமது மகிமைக்காகவும் கடவுளின் வல்லமை செயற்படுவதை நமக்கு நினைவுறுத்துகிறது.

மரியாளின் மறுமொழியின் மற்றையபகுதி கவனிக்கத்தக்க கருத்து மிக்கதாகும்.

"உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது."

மேசியாவை உற்பவிப்பதற்காக கடவுள் மரியாளைத் தெரிந்து கொண்டார். ஆகவே, கடவுளின் சத்தத்தைக் கேட்டபோது அவள் கீழ்ப்படிந்தாள்.

"கடவுளுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்து அவற்றின்படி செய்கிறவனே எனக்குத் தாயும் சகோதரருமாய் இருக்கிறான்" என்றார் இயேசு கடவுளுடைய வார்த்தைகளைக் கேட்டு அதை நடைமுறைப்படுத்திய ஒரு உதாரண வாழ்வை மரியாள் காபிரியேலுக்கு அளித்த மறுமொழியில் காணக்கூடியதாக இருக்கின்றது.

3 ஆம் 4 ஆம் வாரம்

மரியாள் - மாதிரி சீஷத்துவம்

மனன வாக்கியம்: (புனித லூக்கா 2:49-50)

"நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்றார் இயேசு. ஆனால் அவர்களோ அவரது வார்த்தைகளைப் புரிந்து கொள்ளவில்லை.

★ இது எதைத் தெளிவுபடுத்துகிறது?

இவை இயேசுவின் பிள்ளைப் பராயம் பற்றிப் புதிய ஏற்பாட்டிலே குறிப்பிடப்படும் கதையில் வரும் வாக்கியங்களாகும். இயேசுவின் குடும்பம் யூத குலத்தில் மிக வறுமையானதாக வாழ்ந்த போதிலும் யூத கலாசார நியமங்களிலே நேர்மையும் ஒழுங்கும் உள்ளதாக இருந்தது. யூதர்களான ஆண்கள் எருசலேமுக்குப் போய் பண்டிகையை ஆசரிப்பதை வழமையாகக் கொண்டிருந்தார்கள். யோசேப்பு தன் குடும்பத்தாரோடும் கூடச் சென்று அக்கடமையை முழுமையாக நிறைவேற்றினான்.

பண்டிகையின் முடிவில் கலிலேயாவுக்கு அவர்கள் திரும்பி வந்து கொண்டிருந்த போது வழியிலே இயேசுவைக் காணாமல் மரியாளும் யோசேப்பும் மனம் நொந்தார்கள். மீண்டும் எருசலேமுக்கு அவர்கள் வந்தபோது அங்கே ஆலயத்தில் அவரைக் கண்டார்கள். "அனாவசியமான சிரமத்தை எங்களுக்கு ஏன் கொடுத்தாய்"? என அவர்கள் கேட்டபோது அவர் அளித்த இந்தப் பதிலை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இக்கதை முதலாவது இயேசுவைப் பற்றியும் இரண்டாவது மரியாளைப் பற்றியும் சில உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. இயேசு முதலாவதாகப் பேசியதாக லூக்காவின் நற்செய்தியில் காணப்படும் இவ்வார்த்தைகள் பூலோகப் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதற்கும் மேலாக கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டியதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மாதிரியைத் தெளிவுபடுத்தி நின்றன. உண்மையில் இயேசு மரியாளையும் யோசேப்பையும் விட்டுத் தொலைவில் விலகியிருப்பது போல் காணப்பட்டார்.

கானாவூர்த் திருமணத்தில் இயேசு நீரைதிராட்சரசமாக மாற்றியதாக யோவான் 2 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவத்தை ஒட்டியதாக இக்கதை விளங்குகிறது. திருமண வீட்டிலே திராட்சரசம் தீர்ந்துபோன போது மரியாள் இயேசுவானவரின் உதவியை வேண்டினாள். இதற்கு இயேசு அளித்த பதில் சற்று கடினமானதாகவே காணப்பட்டது.

"ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன?"

என்றாலும் இது ஒரு மரியாதைக் குறைவான வார்த்தைப் பிரயோகம் அல்ல. அன்னையுடன் அவர் கொண்டிருந்த அன்புக் குறைவைப் பிரதிபலிக்கும் அர்த்தமும் அங்கு இல்லை.

மரியாள் தனது தாய்மைக்குரிய உரிமைகளையும் அவரிடமே அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதையே இயேசுவின் வார்த்தைகள் குறித்தன.

இந்த இரு சம்பவங்களுமே 'மரியாள் இயேசுவை அறிந்து கொள்வதில் முன்னேற்றம் கண்ட ஒரு முன்மாதிரியான சீஷி' என்பதைக் காண்பிக்கின்றன. அத்தோடு அவளது தாய்மை உறவும் அவளுக்கு உதவியாக அல்லாது இடையூறாகவே இருந்து கொண்டது. இதை உணர்ந்து கொள்வதே பெரும் போராட்டமாக இருந்தது. "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப் போகும்" (லூக். 2:35) என்ற சிமியோனின் கூற்றுப்படி இயேசுவிலுள்ள தனது உரிமைகளைக் கூட கைவிட வேண்டிய நிலை மரியாளுக்கு ஏற்பட்டது. மன வேதனைகளின்றி மரியாள் வாழ்ந்ததாகக் குறிப்பிட முடியாது. இறுதியாக, இயேசுவின் மரணத்தோடு அது உச்ச நிலையை அடைந்து ஆழ்ந்த துயரத்தை அளித்தது. ஆனாலும், மரியாள் தனது வேதனைகள் - போராட்டங்களைக் குறித்து யாரையுமே கடிந்து கொள்ளவில்லை. ஏனெனில் கடவுளின் திருமைந்தனைப் பற்றிய நிறைவான அறிவில் வளர்ச்சிபெறும் சரியான சீஷத்துவ வழியை அமைத்துக் கொடுப்பவரும் அவரே.

5 ஆம் 6 ஆம் வாரம்

மரியாள் - ஒரு புதிய குடும்பத்தின் அங்கம்

மனை வாக்கியம் - (புனித யோவான். 19:26-27)

"இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு தம்முடைய தாயை நோக்கி, 'ஸ்திரீயே, அதோ, உன் மகன்' என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி, "அதோ உன் தாய்" என்றார்."

✱ இவை எதைக் குறிக்கின்றன?

மரியாள் தொடர்பாக நற்செய்தி நூல்களில் தரப்பட்டிருக்கும் எல்லாக் குறிப்புகளையும் விட இது மிக மிக வேதனைக்குரியதொரு சந்தர்ப்பமாகும். தனது மகனின் மரணத்தை எதிர்பார்த்தபடி தாயாகிய மரியாள் சிலுவையண்டையிலே துயரத்தோடு நிற்கின்றாள். இயேசுவின் வரலாறு இறுதியில் இவ்வாறாக முடிவுபெறுமென அவள் எதிர்பார்த்திருக்கவே இல்லை.

மீண்டும் இங்கே மரியாளை விட இயேசுவே பிரதான கதாபாத்திரமாக வருகின்றார். அவரது உயிர் பிரியும் தறுவாயிலும் ஓர் உத்தம பணியை அவர் நிறைவேற்றுகிறார். தான் வெகுவாக நேசித்து வந்த தனது சீஷனான செபதேயுவின் குமாரன் யோவானை தன் அன்னையின் மகனாக அறிமுகம் செய்து அன்னையை அவனிடம் ஒப்படைக்கின்றார். மறுபுறம் அந்தச் சீஷன் மரியாளின் மகனாக சேர்ப்பிக்கப்படுகிறான்.

தன் அன்னையின் நிலையினைப் பொறுத்தமட்டில் அச்சந்தர்ப்பத்தில் அவசியமாகவும், அவசரமாகவும் மேற்கொள்ளப்பட்ட இயேசுவின் அன்பு நடவடிக்கையாக இது கருதப்பட்டாலும் கூட ஆழமான அர்த்தங்களும் இதில் அடங்கியுள்ளன.

நற்செய்திகள் அனைத்திலுமே மானிட குடும்பங்களை கடவுளின் குடும்பங்களாக இயேசு உருவகித்துள்ளார். தங்களது உறவுகளையும் குடும்பங்களையும், உதறிவிட்டு வருபவர்கள் தற்போது தமது இல்லங்களிலும், இன ஜன, பந்து உறவுகளிலும், நிலபுலன்களிலும் பெறுவதைப் பார்க்கிலும் நூறத்தனையான நன்மைகளைப் பெறுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் ஒரு புதிய குடும்ப உறவுக்குள் அழைக்கப்படுகிறார்கள். 'கடவுளுடைய வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவனே எனக்குத் தாயும் சகோதரனுமாய் இருக்கிறான்" என இயேசு குறிப்பிட்ட போது, பூலோகக் குடும்ப உறவுகளை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாக மதிப்பிடவில்லை. அவரைப் பின் பற்றுவோர் பரலோகின் குடும்ப ஜீவியத்தை உணரும்படியாக இவ்வுலக மக்களுடன் அவர் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்து காட்டினார். சிலுவையடியிலே மரியாளும் யோவானும் ஒருவரையொருவர் பராமரிக்கும் உத்தரவாதத்தினைப் பெற்றார்கள். அவர்களுடைய புதிய குடும்ப உறவானது ஒன்றிணைந்ததும், இயேசுவின் மரணத்தினால் ஏற்படுத்தப்பட்ட கடவுளின் புதிய குடும்பத்துக்கான முன் அனுபவமுமானதாக அமைந்தது.

இத்தகைய உறவுகளை இன்றும் நாம் எமது திருச்சபை ஐக்கியத்திற்கூடாக அனுபவிக்கக் கூடியதாக இருக்கிறதல்லவா?....

(தொடரும்.)

## சந்திப்பு....

இயேசுவே, நீர்
பிலிப்பை -
அத்தி மரத்தின் அடியிலும்
சகேயுவை -
அத்தி மரத்தின் மேலும்
சவுலை - வழியிலும்
லாசருவை - குழியிலும்
சந்தித்தீர்.
என்னை -
எங்கே... எப்படி.... எப்போ...
சந்திக்க உம்சித்தம்?

# 92 உடன்........ 'தொடர்பு'

தொண்ணூற்றி ஒன்றுடன் தொடர்பில்லை எமக்கினி
தொண்ணூற்றி ரெண்டுடன் தொடர்பு கொண்டிங்கினி
தொடர்புகள் வளர்ந்துநம் துயர்களும் நீங்கிட
தொடர்புடன் நெருங்குவோம் தூரவழி போகாமல்...

★ வாசக நேயர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த 'தொடர்பு'........

- இயேசுக் கிறிஸ்துவை அறியாதவர்கள் அவரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும்,
- இயேசுக் கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்கள் விசுவாசத்தில் வளர்ச்சி பெறுவதோடு கிறிஸ்துவின் மகிமைக்கான சாட்சிகளாக விளங்குவதற்கும்,
- இயேசுக் கிறிஸ்துவை அறிந்து கொள்வதோடு சமூகத்திற்குப் பயன்படும் நற்பிரஜைகளாகப் புறப்படுவதற்கும்,
- எமது வேதாகமக் கல்வி நிலைய — BIBLECOR – மாணவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுவதற்குமாகும்.

## சிந்தனைக்குச் சில வார்த்தைகள்

- உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால் உங்களுக்குப் பலன் என்ன?
- உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்குப் பலன் என்ன?
- திரும்பக் கொடுப்பார்கள் என்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன?
- உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். நன்மை செய்யுங்கள். கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள். அப்பொழுது உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாய் இருப்பீர்கள். அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே.

— லூக்கா. 6 : 32

அன்பார்ந்த நேயர்களே,

- சஞ்சிகையை வாசித்து விட்டீர்களா?
- தயவு செய்து உங்கள் நண்பர்களுக்கும் இதை அறிமுகம் செய்யுங்கள்.
- சஞ்சிகை பற்றிய உங்கள் எண்ண அலைகளை ஆசிரியருக்கு எழுதி அனுப்புங்கள்.

— நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளத்தின் பாரம் போக்கிட
உலகத்தின் கவலை நீக்கிட
உண்மைச் சமாதானம் பெற்றிட
இறைவனின் –
உன்னத அன்பினை உணர்ந்திட
உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

# இலவச வேதாகம வழிக் கல்வி

தொடர்பு கொள்ளுங்கள்:

# 'BIBLECOR'

6, Balahenamulla Lane
COLOMBO - 6

☎ 01-554009

இச் சஞ்சிகை கொழும்பு - 6, பல்ஹேனமுல்ல ஒழுங்கை - இல. 6 இல் வதியும் அருட் திரு ஆர். துரைராஜா அவர்களுக்காக, கெங்கல்ல - கண்டி வீதி – 90 A 'தாசன்ஸ்' இல்லத்தில் வசிக்கும் தேவதாசன் ஜெயசிங் அவர்களால் கண்டி – கொழும்பு வீதி – இல. 190 இல் உள்ள றோயல் அச்சகத்தில் அச்சேற்றப்பட்டு 25.12.1991 ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org